# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*


<u>வழக்கு எண்.25245/விசாரணை/09</u>

**<u>விசாரணை நாள் 29.01..2010 – இராமநாதபுரம்</u>**

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. சி. காயாம்பு<br>ஆர்.ஆர்.டி 11–12/37<br>ஆசிரியர் வீதி, திரு நகர்<br>மதுரை – 625 006. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர் /<br>காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்)<br>மாவட்ட காவல் அலுவலகம்<br>மதுரை. |

----------

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் இன்று (29.01.2010) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு. சி. காயாம்பு, பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. எஸ். ஜெயக்குமார், காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்), மதுரை மற்றும் திரு. பி. சோமசுந்தரம், உதவி ஆய்வாளர், திரு நகர் காவல் நிலையம், மதுரை ஆகியோர் வந்திருந்தனர்.

இவ்வழக்கு ஏற்கனவே 03.09.09 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. அன்றைய விசாரணையின் போது மனுதாரர் தன்னுடைய மேல்முறையீட்டில் கோரிய விளக்கங்கள் குறித்த தகவல்களை ஆணையத்தின் ஆணை

கிடைக்கப் பெற்ற பத்து நாட்களுக்குள் மனுதாரருக்கு அளிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டிருந்தது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர் 25.9.09 அன்று மனுதாரருக்கு தகவல்களை அனுப்பியதாக இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். மனுதாரரும், பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய தகவல்களை பெற்றுக் கொண்டதாக கூறினார். ஆனால், பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய தகவல்கள் உண்மைக்கு புறம்பாக உள்ளது என்று இவ்வாணையத்தின் முன் வலியுறுத்திக் கூறினார். இவ்வாணையமும் பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு அளித்த விளக்கங்கள் சரியில்லையென்று கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய விளக்கங்களுக்கு உண்மையான, முழுமையான தகவல்களை மனுதாரருக்கு இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரண்டு வாரங்களுக்குள் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், தகவல் வழங்கிய விபரத்தையும் இவ்வாணையத்திற்கு மூன்று வாரங்களுக்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 09.2.2010
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவிப் பதிவாளர்.

<u>வழக்கு எண்.25245/09</u>
பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர் (குற்றம்)
மாவட்ட காவல் அலுவலகம்
மதுரை.

திரு. சி. காயாம்பு
ஆர்.ஆர்.டி. 11–12/37
ஆசிரியர் வீதி, திரு நகர்
மதுரை – 625 006.